# மிட்ஸ்
# ஐக்கிய சுடர்

சுடர் 15 கதிர் 3

ஜூலை - செப்டம்பர் 2024

மும்மாத இதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்

## உலக ஓசோன் தினம்





Prop.: Johnson
TASTE FOOD
CATERING
Fathima Nagar. 04651-240419 94432 09989
TASTE FOOD
OUTDOOR CATERING
Mob : +91-94432 09989

ஆதரவாளர்கள்
**மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ்**
தலைவர் - மிட்ஸ்

**அருட்தந்தை. முனைவர் ஜெறோம் C.**
இயக்குநர் - மிட்ஸ்

ஆசிரியர்
**திரு. M.G. ஜோசப் பேட்ரிக் ஆன்டனி,**
M.S.W., LL.B.,

ஆசிரியர் குழு

**திருமதி. A.L. புஷ்பலதா**

**திருமதி. M. ஜெசீந்தா**

**திருமதி. C. கிருஷ்ணகுமாரி**

**திருமதி. T. ஷைலா ராணி**

**திருமதி. A. ஷிஜி**

**திருமதி. P. நிவேதா**

தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
**திருமதி. V. சுனி**

வெளியீடு
**மிட்ஸ்,**
இடைவிளாகம் - கழுவன்திட்டை
குழித்துறை - 629 163, குமரி மாவட்டம்.

Ph : 04651-263390, 295690
Email : mids.marthandam@gmail.com
Website : mids.org.in

அச்சிட்டவர்
**நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
நாகர்கோவில்

**தனிச்சுற்றுக்கு மட்டும்**



# உள்ளே ...


1. இயக்குநர் கடிதம் 2
2. அகில உலக ஓசோன் தினம் 3
3. முதியோர்கள் 5
4. உலக எழுத்தறிவு தினம் 2024 6
5. விடுகதைகள் 8
6. தமிழின் பெருமை 8
7. உடல் நலம் காக்கும் நாட்டு மருந்துகள் 9
8. அழகை மெருகூட்டும் அழகு குறிப்பு 9
9. திருமதி. பாப்பா மரியகிரி அவர்களின் வெற்றிப் பாதை 10
10. ஆசிரியர் தினம் 11
11. மனத்திருப்தி - குட்டிக் கதை 13
12. நிறைவாழ்வுச் சங்கம் 13
13. குடும்ப வளர்ச்சித் திட்டம் - அலகு I & II 14
14. விருட்சம் நுண்கடன் திட்டம் 15
15. தளிர்கள் உலகம் மற்றும் விண்ணைத்தொடு 16
16. மிட்ஸ் மரியன் இயக்கம் 18
17. கோல்பிங் 18
18. தன்னார்வலர் கூடுகை 19
19. Cancer Day Fund Collection 20
20. MIDS Member Welfare Scheme (MMWS) 22
21. குறுக்கெழுத்துப் போட்டி 24


சிந்திப்பதை விட அதிகமாக செயல்படுங்கள்! வெறுவதை விட அதிகமாக கொடுங்கள்!
வெறுப்பதை விட அதிகமாக நேசியுங்கள்!

# இயக்குநர் கடிதம் . . .

நமது அடிப்படைத் தேவையான உணவை நாம் காய்கறிகளிலிருந்து அதிகம் பெற்றுக் கொள்கிறோம். உடலுக்குத்தேவையான தாதுப் பொருட்கள், விட்டமின்கள், நார்ச் சத்துக்களை காய்கறிகள் நமக்குத் தருகின்றன. காய்கறிகள் இயற்கையாகவே உயிர்காக்கும் மருந்தாக செயல்படுகின்றன. மேலும், உயிர்ச் சமநிலைப் பேணுவதில் காய்கறிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. சர்வதேச அளவில் காய்கறி உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடத்திலும், இந்திய அளவில் தமிழகம் ஒன்பதாம் இடத்தில் திகழ்கின்றன. இருப்பினும், காய்கறி மற்றும் பழங்கள் தேவையான அளவு அனைவரையும் சென்றடைவதில்லை. உற்பத்தியில் பெருமளவு கிடங்குகளிலும் பெருஞ்சந்தைகளிலும் வீணாகிப் போகின்றன. இந்தியாவில் சரியான மற்றும் சத்துள்ள உணவுப் பற்றாக்குறையால், 12 முதல் 15 விழுக்காடு மக்கள் இறப்பதாக இந்திய மருத்துவக் கழக அறிக்கை கூறுகிறது.

இன்று நம்மூரில், பெருகிவரும் பல்வேறு சூழற்காரணிகளால் காய்கறிகளின் உற்பத்தியும் பயன்பாடும் அருகிவருகின்றன. வீடுகளிலும், அருகமை வயல்வெளிகளிலும் குறைந்த செலவில் வாங்கக்கிடைத்த காய்கறிகள் இன்று, உற்பத்தி இன்றியும், அதிக பொருட்செலவில் பெருஞ்சந்தை களை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம். கிடைக்கப்பெறும் காய்கறிகளும் நச்சு வேதியியல் பொருட்களால் உரங்களாகவும், பூச்சிக் கொல்லிகளாகவும் உள்வாங்கப்பட்டு, மனித உடலைப் பாதிக்கும் நோய் உருவாக்கும் காரணி களாக மாறிவிடுகின்றன. உணவே மருந்து என்ற நம்பிக்கைத் தகர்க்கப்பட்டு, நோயை உருவாக்கி வளர்க்கும் உணவுகளாக மாறிவருகின்றன.

உண்மையில் இறைவன், மனிதன் உயிர்வாழத் தகுந்தமுறையில் இயற்கையை வடிவமைத்த பிறகே, மனிதனை ஏதேன் தோட்டத்தில் வாழப்பணித்தார். நமது அலட்சியப்போக்கு, பொறுப்பின்மை, உண்மை களை உள்வாங்கி தன்மயப்படுத்தாமை, மற்றும் தான்தோன்றித்தனம் போன்றவற்றால் ஏதேன் தோட்ட பாதுகாப்பு வளையத்திலிருந்து விலகி வருகிறோம். பலவகை நோய்த்தொற்றுகளுக்கு



ஆளாகி, நம்மை பலவீனப்படுத்திக் கொள்கிறோம். புற்றீசல் போன்று புற்றுநோய் பெருகிவரும் நமது குமரி மாவட்டத்தில், நமது உணவை நாமே தீர்மானிக்கவில்லை எனில், நமது அழிவை நாம் தடுத்துநிறுத்த இயலாது. நழுவிச்செல்லும் நல்லவற்றைத் தாவிப்பிடித்து தன்னகப்படுத்துவது தனிமனிதனின் சமூகக் கடமையாகும். ஆகவே, நீடித்த நிலையான வளர்ச்சியைக் குறிப்பால் உணர்த்தும் கருத்தியல் செயல்பாடுகளை, காலம் கடினமாகக் கருதினாலும் விடாமல் துரத்திப் பிடித்து, தூக்கி நிறுத்துவது நமது தேவையாக மாறுகிறது. ஏனெனில், அடிப்படை மனிதவாழ்வை கட்டமைக்கும் காரணிகளை அலட்சியத்தாலோ அல்லது வேறு எந்த நவீன காரணிகளாலோ புறக்கணிக்க இயலாது.

நமது வீடுகளிலே காய்கறி நம் உணவுப் பழக்கத்திலும், காய்கறிகளை நமது வீட்டுத் தோட்டத்திலும் கொண்டுவருவோம்! நச்சற்ற, இயற்கையான, மரபுவிதைகளைப் பயன்படுத்தி, வீட்டைச்சுற்றியும், மாடிகளிலும், சூரிய ஒளிபுகும் அனைத்து இடங்களிலும் காய்கறித்தோட்டம் அமைப்போம். இதன்மூலம், நவீன உயிர்க்கொல்லி நோய்களை கூண்டோடு அழிப்போம்! மண்ணை நேசிக்கும் எளிய விவசாயிகளாக மாறுவோம்! மிட்ஸின் நண்பர்கள் சமூக மாற்றுமனிதர்கள் என்பதை நிரூபிப்போம்! வாழ்த்துகள்!

என்றும் அன்புடன்.

**அருட்தந்தை. முனைவர் ஜெரோம் C.**
இயக்குநர், மிட்ஸ்

கல்விக்கு முடிவே இல்லை. ஒரு புத்தகத்தைப் படித்து, தேர்வில் தேர்ச்சி பெற்று, முடிப்பதல்ல கல்வி. நீங்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை, முழு வாழ்க்கையும், ஒரு கற்றல் செயல்முறையே. — ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி



# அகில உலக ஓசோன் தினம்

**திருமதி. P. ஜெசீந்தா**
ஒருங்கிணைப்பாளர்

உலகில் உயிரினங்கள் உயிர் வாழ வான்பரப்பில் ஓசோன் படலம் ஆற்றிவரும் பணி மகத்தானது. இன்று நம்மை அறியாமல் நமது நடவடிக்கைகள் காரணமாக ஓசோன் படலத்திற்கு ஏற்பட்டு வரும் பாதிப்புகளை அனைவருக்கும் உணரச் செய்யவும், அதே நேரத்தில் அதன் பாதுகாப்பை உறுதி செய்யவும் ஆண்டுதோறும் உலகநாடுகள் செப்டம்பர் 16-ம் தேதியை ஓசோன் தினமாக நினைவு கூருகின்றன.

### ஓசோன் என்பது என்ன?

ஓசோன் என்பது மூன்று ஆக்சிஜன் அணுக்கள் சேர்ந்திருக்கும் ஒரு மூலக்கூறாகும். இது வளிமண்டலத்தின் மேல் வாயுநிலையில் காணப்படுகிறது. இது நிலைத்தன்மை இல்லாமல் இலகுவாக சிதைந்துவிடும் தன்மை கொண்டது. 1840-ல் சி.எப்.ஸ்கோன்பின் என்பவர் ஓசோனை கண்டுபிடித்தார். அதற்கு கிரேக்க மொழியில் மணத்தை குறிக்கும் ஓசோன் என்று பெயர் சூட்டினார்.

### ஓசோனின் பணிகள்

புவிக்கு அருகே காணப்படும் ஓசோன், சூழலில் மாசுத்தன்மை ஊட்டுவதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் மனிதர்கள் உட்பட விலங்குகள் பலவற்றின் சுவாச செயல்பாட்டிற்கு கேடு விளைவிப்பதாக நிரூபிக்கப்பட்டிருப்பதே இதற்கு காரணமாகும். ஆனால், புவியின் வளிமண்டலத்தின் மேல்மட்டங்களில் உள்ள ஓசோன் வளி, உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கும் புறஊதாக்கதிர்களை தடுத்து, உலகில் ஊடுருவும் அளவைக் குறைக்கிறது. சூரிய ஒளிக்கதிர்களில் நம் கண்ணுக்குத் தெரியாத ஒளிக்கதிர்கள் உள்ளன. இத்தகைய ஒளிக் கதிர்களை செங்கீழ் கதிர்கள், புற ஊதாக் கதிர்கள் என பிரிக்கலாம். செங்கீழ்கதிர்கள் சூரியனிடமிருந்து வெப்பத்தை சுமந்து வந்து பூமியை வெப்பமடைய செய்கிறது. புற ஊதாக்கதிர்கள் பூமியில் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல், விலங்கினங்களுக்கும் தாவரங்களுக்கும் மிகுந்த பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இத்தகைய தீமை விளைவிக்கும் புறஊதாக்கதிர்களிடமிருந்து பாதுகாப்பு கவசமாக ஓசோன் படலம் செயல்படுகிறது. ஓசோன் படலம் புறஊதாக்கதிர்களின் தாக்குதல்களிலிருந்து பூமியைக் காப்பாற்றுவதோடு, மற்ற பசுமை இல்லா வாயுக்களோடு சேர்ந்து புவிவெப்பமயமாதலை தடுக்கிறது.

### ஓசோனை ஏன் பாதுகாக்கவேண்டும்?

நாம் ஏன் வளிமண்டலத்தின் ஓசோன் அடுக்கினை பற்றி கவலை கொள்ளவேண்டும்? அதில் ஓட்டை விழுந்தால் நமக்கென்ன என்று இன்று நாம் அமைதியாக இருந்துவிட முடியாது. ஏனெனில் ஓசோனில் விழும் ஓட்டை மனித உடல்நலத்திலும் ஓட்டைகளை உண்டாக்கி

கற்றலை நிறுத்தும் எவரும், இருபது அல்லது எண்பது வயதினராக இருந்தாலும் வயதானவரே. கற்றலைத் தொடரும் எவரும் இளமையாக இருப்பார்கள். வாழ்க்கையில் மிகப் பெரிய விஷயம் உங்கள் மனதை இளமையாக வைத்திருப்பதுதான். — ஹென்றி ஃபோர்ட்

விடும். தோல் புற்றுநோய், சூரியனின் அதிகபட்ச வெப்பத்தினால் தோல் வெந்து சிகப்பாதல், கண்புரை நோய் போன்ற நோய்கள் ஏற்படும். ஓசோன் மெல்லியதாய் மாறுவதால் தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

### ஓசோன் குறைபாட்டிற்கும் உலகவெப்பமயமாதலுக்கும் உள்ள தொடர்பு

ஓசோன் குறைபாட்டிற்கும் உலக வெப்பமயமாதலுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. உலக வெப்பமயமாதலின் காரணமாக இருக்கக்கூடிய கார்பன்-டை-ஆக்சைடுதான் வளிமண்டல அடுக்கான ஸ்ட்ரேட்டோஸ்பியரை குளிர்ச்சிபடுத்துகிறது. இந்த குளிர்ச்சியானது ஓசோனை அதிகரிப்பிற்கும், துருவப்பகுதிகளில் ஓசோன் துளை விழுவதற்கும் காரணமாகிறது. ஓசோன் அடுக்கினை பாதுகாப்பதற்கான சர்வதேச வியன்னா ஒப்பந்தம் 1985-ல் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1988-ல் நடைமுறைப்படுத்தப் பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் இதனை ஏற்றுக்கொண்டன. ஆனால் இது சட்டப்பூர்வமாக ஓசோன் அடுக்கினை பாதுகாக்க வழிகாட்டவில்லை. அதற்காகத்தான் 1987-ம் ஆண்டு செப்டம்பர் 16-ம் நாள் மாண்ட்ரயல் வழிமுறைகள் உருவாக்கப்பட்டன. சர்வதேச முயற்சிகளின் காரணமாக அண்டார்டிகாவில் ஓசோனில் ஏற்பட்ட துளையானது மிக மெதுவாக தன் நிலையை மீண்டும் அடைந்து கொண்டு வருகிறது.

### ஓசோன் எவ்வாறு சேதமடைகிறது

ஓசோன் சேதமடைவதற்கு முக்கிய காரணம் குளோரோபுளூரோ கார்பன் ஆகும். இந்த குளோரோபுளூரோ கார்பன் நாம் அன்றாடம் பயன்படுத்தும் குளிர்சாதனப்பெட்டி, ஏசி, ஏர் கூலர்கள், தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் குளிரூட்டிகள் போன்றவற்றிலிருந்து வெளியேறும் வாயு நூறு வருடம் வரை அப்படியே இருக்கும். சூரியக் கதிர்கள் இந்த வாயுவின் மீது படும்போது ஏற்படும் வேதியல் மாற்றத்தால் ஓசோன் ஆக்சிஜனை இழுத்துக் கொண்டு கார்பன் மோனாக்சைடாக மாறுகிறது. இதனால் வளிமண்டலம் முழுவதுமாக சிதைக்கப்படுகிறது. இந்த காரணங்களுக்காக 1987-ம் ஆண்டு குளோரோபுளூரோ கார்பன் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது. இதற்கு பதிலாக குளோரின் இல்லாத ஹைட்ரோபுளூரோ கார்பன் குளிர்சாதன பெட்டியில் உபயோகிக்கப்படுகிறது.

### ஓசோன் வாயு அழிவதால் ஏற்படும் விளைவுகள்

ஓசோன் வாயு அழிக்கப்படும் நிலை உருவானால் பனிக்கட்டிகள் உருகி, கடல்மட்டம் உயர்ந்து, நிலப்பரப்பு அழிந்து, வெப்பம் காரணமாக வறட்சி அதிகரிக்க ஆரம்பிக்கும். மிகவும் முக்கியமாக ஓசோன் வாயுக்கள் அழிந்தால் மனிதர்களையும் விலங்குகளையும் புறஊதாக் கதிர்கள் நேரடியாக தாக்கும். தாவரங்களின் உற்பத்தி திறனை குறைத்து அவற்றை மலடாக்கிவிடும். கோடிக்கணக்கான கடல்வாழ் உயிரினங்களும் இதனால் இறக்கும் அபாயம் உள்ளது. ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கானோர் தோல் புற்றுநோயால் பாதிக்கப்படுவதாக புள்ளி விபரம் சொல்கிறது. இதற்கு காரணம் ஓசோன் மண்டலம் சிறிதுசிறிதாக வலுவிழந்து வருவதே ஆகும்.

### ஓசோன் மண்டலத்தை பாதுகாப்பது எப்படி?

குளோரோ புளூரோ கார்பன் பயன்படுத்து வதை தவிர்த்தாலே நாம் ஓசோன் சேதமடைவதை பாதி நிறுத்திவிடலாம். இதற்கு தடைவிதித்த போதிலும் பல நாடுகளில் இன்றும் இதை பயன்படுத்தி கொண்டுதான் உள்ளனர். இதை தடுக்க வேண்டும். பிளாஸ்டிக் தொழிற்சாலைகளை முற்றிலும் ஒழிக்க வேண்டும். மண்ணை சிறிதுசிறிதாக செயலிழக்கச் செய்யும் பிளாஸ்டிக், பாலிதீன் ஆகியவற்றின் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும். தற்போது நிலவிவரும் பருவநிலை மாற்றத்திற்கான காரணம் ஓசோன் படலமும், புவி வெப்பமயமாதலுமே ஆகும். மரங்களை வெட்டி காடுகளை அழித்து புவி வெப்ப மயமாதலுக்கு வழிவகுக்கின்றனர். பிளாஸ்டிக் மற்றும் பாலிதீன் போன்றவற்றின் பயன்பாட்டை தவிர்த்து, மரங்களை அதிகளவில் வளர்த்து காடுகளை காத்தால் புவிவெப்பமயமாதலை தடுப்பதோடு வளிமண்டலத்தையும் காக்கலாம். சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்தி ஓசோன் படலத்திற்கு பாதுகாப்பு கவசம் கொடுத்து வருங்கால சந்ததியினர் வாழ வழி செய்வோம்.

**தோல்வியில் இருந்தே கற்றல் தொடங்குகிறது. முதல் தோல்வியே கல்வியின் ஆரம்பம். – ஜான் ஹெர்சி**



திருமதி. T. சைஷா ராணி
அமைப்பாளர்

# முதியோர்கள் !!!

நல்ல குணங்களை கொண்டிருக்கும் கோபுரங்களாய்!
இருளைப்போக்கும் ஒளிவிளக்காய்!
ஆயிரமாயிரம் புத்தகங்களை கொண்ட நூல்
நிலையங்களாய் !
இரவினில் வீட்டில் விழித்திருக்கும்
காவல்காரர்களாய்
பகலில் பேரக்குழந்தைகளின் அம்மா - அப்பாவாய்!
எளிய வாழ்க்கையின் சொந்தகாரர்களாய்
ஏழைகளுக்கு இரங்கும் நற்குணம் படைத்தோராய்
சுற்றாரின் தனிமையை போக்கும் நண்பர்களாய்
பாரம்பரியத்தை கட்டிக்காக்கும் பெரியோர்களாய்
உறவினர்களை தக்கவைக்கும் பாலங்கள்
பருவகாலங்களை கணித்துச் சொல்லும்
வானிலை ஆய்வாளர்களாய்
உழைப்பை ஊக்குவிக்கும் ஊக்குவிப்பாளராய்
உரிமைகளை பகிர்ந்து வழங்கும் துலாக்கோலாய்
நோயுற்ற தருணங்களில் வீட்டு மருத்துவராய்
ஆரோக்கியத்தை கட்டிக்காக்கும் அறங்காவலராய்
வெள்ளை மனம் படைத்த பிள்ளைகளாய்
வீட்டினிலே முடங்கியிருக்கும் முதியோருக்கு
அன்பையும் அரவணைப்பையும் கொடுப்போம் !
முதியோர்களை பாதுகாப்போம்,
இளம் தலைமுறையினருக்கு
பெற்றோர்களின் தியாகத்தை எடுத்துரைப்போம்!
முதியோர் இல்லங்களை இல்லாமலாக்குவோம் !
முதியோரை அரவணைத்து நம் இல்லங்களை
மகிழ்ச்சியின் இல்லமாய் மாற்றுவோம் ! ! !



## தகவல் அறிவோம்

**தினம் ஒரு கிராம்பை வாயில் போட்டு மென்று சாறை விழுங்கினால் !!!**

- கல்லீரல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்
- பற்கள் வலிமை பெறும்/ பல் வலியை போக்கும்
- உடலில் ஆக்ஸிஜன் அளவை மேம்படுத்தும்
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
- எலும்புகளின் அடர்த்தியை அதிகரிக்கும்
- குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்
- நீரழிவு பிரச்சனை உள்ளவர்களுக்கு மிகவும் நல்லது.



## படிக்கட்டுகளில் ஏறுவதால் உடலில் ஏற்படும் நன்மைகள்

- தினமும் 7 நிமிடங்கள் படிக்கட்டுகளில் ஏறி இறங்குவதால் கொலஸ்ட்ரால் எரிக்கப்படும்.
- இதன்மூலம் இதய நோய்கள், மாரடைப்பு போன்ற பாதிப்புகளை தடுக்கமுடியும்.
- உடலில் உள்ள உயர் ரத்த அழுத்தமும் கட்டுக்குள் இருக்கும் என்கின்றனர் நிபுணர்கள்.
- நுரையீலுக்கான ரத்த ஓட்டம் மேம்பட்டு, சுவாச கோளாறுகளில் இருந்து விடுதலை கிடைக்கும்.
- மன அழுத்தமும், பதற்றமும் குறைய தினமும் படி ஏறுவதும் இறங்குவதும் நல்லது.
- வலுவான எலும்பு காரணமாக மூட்டு வலியில் இருந்தும் நிவாரணம் அடையலாம்.

அடைய வேண்டிய இலக்கு அவசியம் என்றால் பாதை கடினமானாலும் பயணிக்கத்தான் வேண்டும்.




திருமதி. கிருஷ்ணகுமாரி
மிட்ஸ்

'எண்ணும் எழுத்தும் கண்ணென தகும்" என்று தமிழ்ப் புலவர் ஔவையார் கூறியதும், 'கற்க கசடற' என்று திருவள்ளுவர் வலியுறுத்தியதும் எழுத்தறிவின் பெருமையை உணர்த்துகிறது. கல்வியின் முக்கியத்துவத்தை கண்ணியம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய விஷயமாக பொதுமக்களுக்கு நினைவூட்டவும், மேலும் கல்வியறிவு மற்றும் நிலையான சமுதாயத்தை நோக்கி எழுத்தறிவு நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்காகவும் கல்வியின் அடிப்படையே எழுத்தறிவு என்பதை உணர்த்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 8ம் தேதி உலக எழுத்தறிவு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

**அனைத்துலக எழுத்தறிவு நாளின் முக்கிய நோக்கம்**

எழுத்தறிவின் முக்கியத்துவத்தை தனிப்பட்ட மக்களுக்கும், சமூகத்துக்கும், அமைப்புகளுக்கும் அறிய வைப்பது முக்கிய நோக்கம் ஆகும்.

**வரலாறு**

எழுத்தறிவு பெற்ற உலகை உருவாக்குவது மற்றும் எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது என்ற நோக்கத்தோடு 1965ம் ஆண்டு செப்டம்பர் 8-ல் தெஹரான் நகரில் நடைபெற்ற சர்வதேச கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதன் விளைவாக, 1965-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதி முதல் சர்வதேச உலக எழுத்தறிவு தினமாக யுனெஸ்கோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**எழுத்தறிவின்மை என்றால் என்ன?**

ஐக்கிய நாடுகள் சபையின் வரையறையின் படி, ஒரு மனிதன் எந்த ஒரு மொழியிலும் எளிய வார்த்தைகளை எழுதவும், படிக்கவும் தெரியாமல் இருப்பதே எழுத்தறிவின்மை ஆகும்.

**எழுத்தறிவின்மையின் தாக்கம்**

2015ம் ஆண்டு யுனெஸ்கோ அறிக்கையின்படி, உலகளவில் 15 வயதுக்குட்பட்ட 77 கோடியே 60 லட்சம் பேர் அடிப்படை எழுத்தறிவு இல்லாதவர்கள். இதில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் உள்ளனர். அதாவது, உலகில் ஐந்து இளைஞர்களில் ஒருவர் எழுத்தறிவு இல்லாதவர் என்பது கவலைக்குரிய விஷயம்.

மேலும், 7 கோடியே 50 லட்சம் குழந்தைகள் பள்ளிகளுக்கே செல்வதில்லை மற்றும் பலர் பாதியிலேயே படிப்பை நிறுத்திவிடுகின்றனர் என்று யுனெஸ்கோ ஆய்வின் புள்ளி விவரங்கள்

**தேவையற்ற விடயங்களை சிந்தித்து கொண்டிருந்தால், தேவையான விடயங்களை சிந்திக்க நேரம் இருக்காது.**

தெரிவித்தன. இது எதிர்கால சமூகத்தின் வளர்ச்சியை பாதிக்கும்.

**இந்தியாவில் எழுத்தறிவு விகிதம்**

2011ம் ஆண்டு கணக்கின்படி, இந்தியாவில் 74 சதவீதம் பேர் எழுத்தறிவு பெற்றவர்கள். இருப்பினும், இதில் மாநில வாரியாக வேறுபாடுகள் காணப்படுகின்றன. கேரளா மாநிலம் எழுத்தறிவில் முதல் இடத்திலும், பீகார் மாநிலம் கடைசி இடத்திலும் உள்ளது.

**எழுத்தறிவின்மையை போக்க எடுக்கப்பட்ட முயற்சிகள்**

எழுத்தறிவின்மையை போக்க யுனெஸ்கோ பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசாங்கமும் யுனெஸ்கோவின் திட்டங்களோடு இணைந்து பணியாற்றி வருகிறது. அவற்றில் சில:

*1952 – சமூகக் கல்வித் திட்டம்:* இந்த திட்டம் பெரியவர்களுக்கான கல்வி திட்டமாகும்.

*1967 – கிராம விவசாயிகளின் செயல்முறை எழுத்தறிவு திட்டம்:* கிராமப்புற விவசாயிகளின் தேவைகளை மையப்படுத்தி அவர்களுக்கான எழுத்தறிவு கற்பித்தல் திட்டம்.

*1975– பள்ளிசாராக்கல்வி திட்டம்:* பள்ளிக்கு வெளியே கல்வி கற்பிக்கும் திட்டம்

*1978 – தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம்:* பெரியவர்களுக்கான தேசிய அளவிலான கல்வி திட்டம்.

*1986 – மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்:* மக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தப் படும் எழுத்தறிவுக் கற்பித்தல் திட்டம்.

*2000 – சர்வசிக்ஷா அபியான் :* 6 முதல் 14 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளும் பள்ளியில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு இலவச கல்வி வழங்கும் திட்டம்

## அம்பேத்கர், காமராஜர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கல்வி விகிதம் (வரலாற்றுப் பார்வை)

**டாக்டர் அம்பேத்கரும் கல்வியும்**

டாக்டர் பி. ஆர் அம்பேத்கர், இந்தியாவின் சமூக சீர்திருத்தவாதியாகவும், கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியவராகவும் திகழ்ந்தார். அவர் கல்வி என்பது ஒவ்வொரு தனிநபருக்கும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு அவசியமானது என்ற கருத்தை வலியுறுத்தினார். அவரது கல்வி சார்ந்த முக்கிய பங்களிப்புகள்.

சமூக நீதிக்கான கல்வி: அவர் கல்வியை சமூக நீதிக்கான கருவியாகக் கருதினார். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் அவர்களின் சமூக நிலையை உயர்த்த முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்.

பெண்கல்வி: பெண்களின் கல்வியின் முக்கியத்துவத்தை அவர் உணர்த்தினார். பெண்களை கல்விப் பாதையில் கொண்டு வருவதின் மூலம் குடும்பம் மற்றும் சமுதாயம் முன்னேற்றத்தை அடைய முடியும் என்றார்.

அரசியல் விழிப்புணர்வு : கல்வி என்பது அரசியல் விழிப்புணர்விற்கான வழி என்று அவர் நம்பினார். கல்வியுள்ள மக்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றார்.

**காமராஜரும் கல்வியும்**

காந்தியடிகள் போற்றிய காமராஜர் தமிழகத்தின் முதல் கல்வி அமைச்சராகவும், முதல்வர் என்ற பொறுப்பிலும் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்காற்றினார். அவரது முயற்சி களால் தமிழகத்தில் கல்வி நிலை உயர்ந்தது.

பள்ளிக்கூடங்கள்: தமிழகத்தில் பல பள்ளிக் கூடங்கள் கட்டப்பட்டு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

கல்வி உதவித்தொகைகள்: ஏழை மாணவர் களுக்கு கல்வி உதவித்தொகைகள் வழங்கும் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

பெண்கல்வி: பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பெண்களை பள்ளிகளுக்கு அனுப்ப ஊக்குவிக்கப்பட்டது.

**கன்னியாகுமரி மாவட்ட கல்வி விகிதம்**

தமிழகத்தில் கல்வி வளர்ச்சியில் முன்னணியில் இருந்த மாவட்டங்களில் கன்னியாகுமரி மாவட்டமும் ஒன்றாகும். கல்வி விகிதத்தில் இந்த மாவட்டம் மாநிலத்திலேயே முன்னிலை வகித்தது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன.

கல்வி மீதான மக்கள் ஆர்வம்: கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு கல்வி மீது அதிக ஆர்வம் இருந்தது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கல்வி கற்க ஊக்குவித்தனர்.

ஒருவருக்கு குப்பையாக தெரியும் நீ, அடுத்தவருக்கு பொக்கிஷமாக தெரிவாய்;
அது, நீ இருக்கும் இடத்தை பொறுத்தது.


மாவட்டத்தில் போதிய பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் இருந்தன. கல்வி உள்கட்டமைப்பு வசதிகள் நல்ல நிலையில் இருந்தன. மேலும் கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே அதிகமாக இருந்தது. அரசின் திட்டங்கள் மற்றும் ஊக்கத்தொகைகள் கல்வி வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தன.

**கன்னியாகுமரி மாவட்டத்தின் கல்வி விகிதம்:**

கன்னியாகுமரியில் ஆண்களின் கல்வியறிவு 92.82% ஆகவும், பெண்களின் கல்வியறிவு விகிதம் 92.41% ஆகவும் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் உயர்ந்த கல்வி விகிதம், அந்த மாவட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது என்பதில் சந்தேகமில்லை.

எழுத்தறிவு என்பது அடிப்படை உரிமை. கல்வியின் மூலம் எழுத்தறிவைப் பெருக்கி, சமூக முன்னேற்றத்திற்கான பாதையை அமைப்போம் எல்லோரும் எழுத்தறிவு பெற்ற சமூகத்தை உருவாக்குவதே நம் இலக்காக அமையட்டும்.



செல் நோண்டும் பல மணியில்
சில நிமிடம் ஒதுக்கி ...
மண் தோண்டி மரம் நடுவோம்



## விடுகதைகள்

1. கூனிக்கிழவிக்கு வயிறு நிறைய பற்கள். அது என்ன?
2. முல்லைத் தோட்டத்தில் கறுப்பு முத்து. அது என்ன?
3. ஒரே பிள்ளைக்கு ஆயிரம் பிள்ளைகள். அது என்ன?
4. நெருப்பு பட்டால் அழுவான். அவன் யார்?
5. குரல் இல்லாதவன் கூப்பிடுகிறான். அவன் யார்?
6. பட்டமரத்தைத் தட்டினால் படைகள் வரும். அது என்ன?
7. பார்த்தால் சுல்தான், பல் பட்டால் தண்ணீர் தான். அது என்ன?
8. போகும் இடமெல்லாம் தம்பி கோடு கிழிப்பான்; தம்பி, அவன் யார்?
9. மூன்று திருடர்களைச் சுற்றி ஒரு டஜன். போலீஸ், அவர்கள் யார்?
10. இவர்கள் இருவரும் சேர்ந்தால் ஒரு தலை உருளும். யார் இவர்கள்?

*விடைகள்*
1. கதிர் அரிவாள்
2. கண்
3. ஆலமரம்
4. மெழுகுவர்த்தி
5. தொலைபேசி
6. முரசு
7. பனிக்கட்டி
8. நத்தை
9. கடிகாரம், முட்கள்
10. கத்திரிக்கோல்

**திருமதி. நிவேதா**
அமைப்பாளர்

## தமிழின் பெருமை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பறக்கும் எழுத்து | - ஈ , | ருசிக்கும் எழுத்து | - நா, | சுடும் எழுத்து | - தீ |
| வாங்கும் எழுத்து | - கை, | எழுதும் எழுத்து | - மை, | மணக்கும் எழுத்து | - பூ |
| வெறுக்கும் எழுத்து | - சீ , | தொங்கும் எழுத்து | - பை, | அழைக்கும் எழுத்து | - வா |

**நம்மை அறியாமல் தினமும் பயன்படுத்தும் எழுத்துக்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வலிக்கையில் | அ, ஆ | சிரிக்கையில் | இ, ஈ | காரத்தில் | உ, ஊ |
| கோவத்தில் | எ, ஏ | வெட்கத்தில் | ஐ | ஆச்சரியத்தில் | ஒ, ஓ |
| வக்கனையில் | ஔ | விக்கலில் | ஃ | | |

**திருமதி. நிவேதா**
அமைப்பாளர்

**இனிப்பாய் இருந்தால் விழுங்கி விடுவார்கள். கசப்பாய் இருந்தால் துப்பி விடுவார்கள். உப்பாய் இருங்கள் அப்போது தான் சரியாக உபயோகிப்பார்கள் . . .**



# உடல் நலம் காக்கும் நாட்டு மருந்துகள்

- நாட்டு வெங்காயம் இரண்டு, மூன்று பச்சையாகவே உரித்து சாப்பிட்டாலும், கொண்டைக்கடலையை லேசாக வறுத்து மென்று சாப்பிட்ட பின் பால் அருந்தி வர தலைவலி, தலைபாரம், இருமல் தீரும்.
- துளசி இலையை அரைத்து, நெற்றியில் பற்றுபோட தலைவலி குணமாகும்.
- சூடான சுக்கு, மல்லி காப்பியில் சிறிது தேன் கலந்து குடிக்க சளி கரையும்.
- ஒரு பாத்திரத்தில் 1 லிட்டர் தண்ணீர் மற்றும் பதிமுகம் பட்டை என இந்த இரண்டையும் சேர்த்து நன்றாக இளஞ்சிவப்பு நிறம் வரும் வரை கொதிக்க வைக்க வேண்டும். அந்த தண்ணீரை தினமும் குடித்து வர எல்லா ஆரோக்கியமும் கிடைக்கும். பதிமுகமானது நமது உடலில் காணப்படும் இரத்த குளுக்கோஸ் அளவினை கட்டுக்குள் வைக்க மிகச் சிறந்த ஒரு மருந்தாக கருதப்படுகிறது.
- அரைகீரை தினமும் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் பிரச்சனையே வராது. குடல் புண்கள் விரைவில் குணமாகும். இது பித்தக் கோளாறுகளால் ஏற்படும் தலைச்சுற்று வாந்தி போன்றவற்றைக் குணப்படுத்தும். அதுபோல அரைக்கீரை இருமல், தொண்டைப் புண் போன்றவற்றை குணப்படுத்துகிறது.

**திருமதி. நிவேதா**
அமைப்பாளர்



# அழகை மெருகூட்டும் அழகுக்குறிப்பு

1. முகத்தை தண்ணீரில் கழுவிய பிறகு பாலாடையால் முகத்தில் மசாஜ் செய்த பின்பு, முகத்தை கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும்.
2. கடலை மாவுடன் புளிக்காத தயிர் சேர்த்து நன்கு பேஸ்ட் போல் கலந்து முகத்தில் அப்ளை செய்து ஐந்து நிமிடம் வரை மசாஜ் செய்த பின்பு, 10 நிமிடம் கழித்து முகத்தை கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும்.
3. தினமும் சிறிய அளவில் பீட்ருட்டை எடுத்து உதட்டில் தடவி மசாஜ் செய்துவர உதடு இயற்கை அழகு பெறும்.
4. கடலை மாவு, பால் ஆடை (பால்), கஸ்தூரி மஞ்சள் தூள் மூன்றையும் கலந்து முகம், கழுத்து, மற்றும் கை, கால்களில் தடவி 10 நிமிடம் ஆறவிட்டு கழுவினால் தோல் மிருதுவாகவும் பளிச்சென்று இருக்கும்.
5. கஸ்தூரி மஞ்சள் மற்றும் தக்காளி சாற்றினை ஒன்றாக கலந்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி மாஸ்க் போட்டு வந்தால், அது சருமத்தின் நிறத்தை அதிகரிக்கும்.
6. ரவையுடன் தேன் கலந்து மசாஜ் செய்தால் உதடுகளில் ஏற்பட்ட வெடிப்புகள் நீங்கும்.
7. முல்தானி மிட்டி பொடியுடன் தக்காளி சாறு சேர்த்து பூசிவந்தால் முகத்தில் உள்ள பள்ளங்கள் மறைந்து முகம் அழகாக மாறும்.
8. முட்டையின் வெள்ளையுடன் எண்ணெய் கலந்து தலைக்கு தடவி வந்தால் தலைமுடி வலுவாகும் பொடுகு மறையும்.
9. வேப்பிலை, சின்ன வெங்காயம், வெந்தயம் இவை மூன்றும் அரைத்து பேக் வடிவில் தலையில் போட்டு 20 நிமிடம் கழித்து தலையை அலசினால் பொடுகு, அரிப்பு, புண் போன்றவை மறையும்.
10. சைனஸ் பிரச்சனை உள்ளவர்கள் எண்ணெய் தயாரிக்கும் போது, மிளகு சிறிதுசேர்த்து பயன்படுத்தினால் சைனஸ் பிரச்சனை குறையும்.

**திருமதி. A. ஷிஜி**
வரவேற்பாளர்

நீ பட்ட துன்பத்தை விட, அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது - சுவாமி விவேகானந்தர்

## திருமதி. பாப்பா மரியகிரி அவர்களின் வெற்றிப்பாதை

**ஒரு பார்வை**



மிட்ஸ் சமூகப்பணி மையத்தின் களியக்காவிளை பணிமண்டலத்தில், மரியகிரி பங்கு சமூகத்தை சேர்ந்தவர் இவர்கள். கணவர் மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் குடும்பம் நடத்தி வந்தார்கள். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக அமைந்து கொண்டிருந்தது. அந்த சூழ்நிலையில் கணவனுக்கு திடீரென்று பக்கவாதம் எனும் நோயால் அவதிப்பட்டார். கணவருடைய வருமானத்தால் குடும்பம் நடத்திய திருமதி. பாப்பா அவர்கள் மிகவும் வேதனைப்பட்டார்கள். இந்த தருணத்தில் வண்டங்கனாவிளை சுயஉதவி குழுவில் உறுப்பினர் ஆனார். சிறு சிறு உதவிகள் உறவினர்கள் வழியாக பெற்று, குடும்ப சுமைகளையும் தாங்கி, நோயாளியாக படுக்கையில் படுத்திருந்த கணவரையும் கவனித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது குடும்ப வாழ்வு பெறல் திட்டம் வழியாக பயனாளிகளை தேர்வு செய்ததில் திருமதி. பாப்பா அவர்கள் குடும்பத்தையும் மிட்ஸ் குடும்ப வாழ்வு பெறல் திட்டக் குழுமம் தேர்வு செய்தது. அவர்களுடைய குடும்ப விபரங்களை ஜெர்மனியை சேர்ந்த உதவியாளர் திருமதி. ஊர்சலா கிராப் அவர்களுக்கு அனுப்பிக்கொடுக்கப்பட்டது. உதவியாளர் இக்குடும்பத்தை தேர்வு செய்தார்கள். குடும்ப வாழ்வு பெறல் திட்டம் வாயிலாக திருமதி. பாப்பா அவர்கள் பெற்றுக்கொண்ட உதவித் தொகைகளை வைத்து ஓர் காய்கறிகடை வியாபாரம் செய்யலாம் என்று தீர்மானித்து சிறிய அளவில் வியாபாரம் செய்தார்கள். சாலையோரத்தில் பெட்டிக்கடை காய்கறி வியாபாரம் சற்று முன்னேறிக் கொண்டிருந்தது. இந்த வருமானத்தைக் கொண்டு கோள்பிங் சேமிப்பு, குழந்தைகளின் படிப்புச் செலவுகள், குடும்ப செலவீனங்கள், கணவனுடைய மருத்துவ செலவு ஆகியவை நடந்து கொண்டிருந்தது. மட்டுமல்லாமல் குடும்ப வாழ்வு பெறல் ஜெர்மன் திட்டம் வழியாக கிடைக்கப்பெறும் சிறு சிறு தொகைகளைக் கொண்டு சாலையோரக் கடையிலிருந்து சற்று வித்தியாசமாக ஒரு கடையை வாடகைக்கு பெற்று, காய்கறி வியாபாரம் மட்டுமல்லாமல் பலசரக்கு கடையும் நடத்த ஆலோசனைகள் பெற்று, மரியகிரியில் பெட்டிக்கடை வியாபாரத்திலிருந்து கடை வியாபாரத்துக்கு மாறியுள்ளார்கள். மட்டுமல்லாமல், கணவர் பக்கவாத நோயிலிருந்து மீண்டு, தற்போது திருமதி. பாப்பா அவர்களுக்கு கடைவியாபாரம் நடத்துவதில் உறுதுணையாகவும் இருந்து வருகிறார். ஜெர்மன் பயனாளியாக ஒவ்வொரு வருடமும் தன்னுடைய குடும்ப வாழ்வின் மகிழ்சியான தகவல்களையும் சவால்களையும் கடிதம் வழியாக உதவியாளருக்கு தெரிவித்தும் வெற்றியின் பாதையில் பயணித்து வருகிறார். திருமதி. பாப்பா அவர்களுடைய கடின உழைப்பு மற்றும் தன்னம்பிக்கையால், வாழ்வில் வருகின்ற சவால்களை எதிர்நீச்சல் போட்டு, மிட்ஸ் எனும் கலங்கரை தீபத்தின் ஒளியில் வெற்றியோடு வாழ்ந்து வருகின்றது திருமதி. பாப்பா குடும்பம்.




| | |
|---|---|
| முதல் பெண் ஆளுநர் | - பாத்திமா பீவி |
| முதல் பெண் முதலமைச்சர் | - ஜானகி ராமச்சந்திரன் |
| முதல் பெண் மேயர் | - தாரா செரியன் |
| அதிக எழுத்தறிவு கொண்ட மாவட்டம் | - கன்னியாகுமரி |
| மிக உயரமான கொடிமரம் | - செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக் கொடிமரம் |
| மலைகளின் இளவரசி | - கொடைக்கானல் |
| முதல் பெண் தீயணைப்புத் துறை அதிகாரி | - திருமதி மீனாட்சி |
| நாளந்தா பல்கலைக்கழகம் | - பாட்னா |

**எதையும் சாதிக்க விரும்பும் மனிதனுக்கு, நிதானம் தான் அற்புதமான ஆயுதமே தவிர, கோபம் இல்லை.**



# ஆசிரியர் தினம்

திருமதி. A.L. புஷ்பலதா
கணக்கர்

நாடு முழுவதும் வெவ்வேறு நாட்களில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. கல்வி தொடர்பாக மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்திய சிறந்த கல்வியாளர்களையோ கல்வி சம்பந்தப்பட்ட சிறப்பான நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

**ஆசிரியர் பணி என்றால் என்ன?**

ஆசிரியர் பணி என்பது வெறும் கல்வியை மட்டும் போதிப்பது இல்லை. ஒழுக்கம், பண்பு, ஆன்மீகம், பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களை சிறந்த மனிதர்களாக்கும் உன்னதப் பணியாகும். அப்படிப்பட்ட தெய்வீகமானப் பணியை மாணவர்களுக்கு அளிக்க, தன்னலமற்ற, தியாக மனப்பான்மை கொண்டவராக இருந்தால் மட்டும் போதாது, பாசத்தாலும் கற்பிக்கும் தொழிலை நேசிப்பவராகவும் ஆசிரியர்கள் இருக்க வேண்டும்.

**ஆசிரியரின் சிறப்புகள்**

மாதா, பிதா வரிசையில் மூன்றாவது இடம் பெற்றுள்ளவர் குரு. குழந்தையை தன் சொல்லாலும், எழுத்தாலும் ஒரு மனிதனாக உருவாக்குபவரே ஆசிரியர். எனவே தான் தெய்வத்துக்கு முன் மூன்றாமிடத்தில் ஆசிரியரை வைத்திருக்கின்றனர் நம் மூதாதையர்.

ஒரு வெற்றுத்தாளாய் பள்ளியில் காலடி எடுத்து வைக்கும் நம்மை, ஒரு புத்தகமாய் வெளிக்கொணருபவர்கள் ஆசிரியர்கள். மெழுகுவர்த்தி போன்று தன்னை உருக்கி, நம் பாதையில் வெளிச்சங்களைப் பாய்ச்சும் தெய்வங்கள் அவர்கள்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவூட்டு வதோடு அவர்களின் வாழ்க்கையை வடிவமைக் கின்றனர். அறியாமை காரணமாக இருட்டாகி விட்ட உலகில் அறிவால் வெளிச்சம் கொணர்ந்தவர்கள். நம்முடைய ஒவ்வொருவரின் வெற்றியின் உண்மையான தூண்கள். அறிவைப் பெறவும், திறன்களை மேம்படுத்தவும் நம்பிக்கையை வளர்க்கவும், வெற்றிக்கான சரியான பாதையைத் தேர்வு செய்யவும் அவர்கள் நமக்கு உதவுகின்றன.

**ஆசிரியர் தினக் கொண்டாட்டம்**

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 ஆம் தேதி கொண்டாடப்பட்டுவரும் ஆசிரியர் தின நன்னாளில், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பல பேச்சுப்போட்டிகள், கட்டுரை போட்டி என பல்வேறு போட்டிகள் நடத்தி, மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவார்கள். மேலும், சிறந்த ஆசிரியர்களை கௌரவிக்கும் வண்ணமாக அவர்களுக்கு விருதுகள் வழங்கி அரசு அவர்களை பெருமைப்படுத்தும். மாணவர் களும் அந்த நாளில் தங்களது ஆசிரியர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கி, வாழ்த்துக்கள் தெரிவிப்பர்.


ஒரு கல்லை ஒரு சிற்பி செதுக்குவது போல மாணவர்களையும் கொஞ்சம் கொஞ்சமாக செதுக்கி வருகிறார்கள் ஆசிரியர்கள். சாதாரண மாணவர்களை தங்களின் அறிவுத் திறமையாலும், பல அனுபவங்களின் ஆற்றலாலும் மதிப்புமிக்க மனிதராக மாற்றுகிறார்கள்.

ஒரு நாட்டின் எதிர்காலமானது குழந்தைகள். அந்த குழந்தைகளை பொறுப்புள்ளவர்களாக உருவாக்கும் பொறுப்புகள் அனைத்தும் ஆசிரியர் கையில் தான் இருக்கிறது. படித்து முடித்து, வேலைக்கு செல்லும் மாணவர்களின் தொழில் மற்றும் வணிக வெற்றியில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு பெற்றுள்ளார்கள்.

ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுபவராக இருப்பவர் தான் ஆசிரியர். மேலும், மாணவ சமூகத்திற்கு தேவையான ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி என அனைத்தையும் அவர்களுக்கு கற்றுத்தந்து, அவர்களை நல்லவனாக, பண்புள்ளவனாக, சிறந்தவனாக அறிஞராக, மேதையாக உயர்த்தும் உன்னத பணி ஆசிரியர் பணி என்பதை யாராலும் மறுக்க இயலாது. அனைத்து ஆசிரியர் களுக்கும் ஆசிரியர் தின விழா நல்வாழ்த்துக்கள்.

அறிவை விட, தைரியத்தினால் தான் பெரிய பெரிய காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.




விடாமுயற்சி என்ற ஒற்றை நூல் சரியாக இருந்தால், வெற்றி எனும் பட்டம் நம் வசமே.

குட்டி கதை

# மனத்திருப்தி

திருமதி. மகிழா
CTWWC



ஒரு பணக்காரர் தன் வீட்டில் கடவுள் சிலை வைக்க, ஒரு சிற்பியை அணுகி சென்றார். அவர் சென்ற நேரம் அந்த சிற்பி ஒரு பெண் கடவுள் சிலையை செதுக்கிக் கொண்டிருந்தார். கொஞ்ச நேரம் அவர் செதுக்குவதை வேடிக்கை பார்த்த அவர், சிற்பி செதுக்கிய இரண்டு சிலைகளும் ஒரே மாதிரி இருப்பதை கவனித்தார்

உடனே பணக்காரர், ஒரே கோவிலில் எப்படி ஒரே மாதிரி சிலைகள் வைப்பார்கள்? இல்லை இந்த இரண்டு சிலைகளும் வேறு வேறு கோவிலுக்காக செதுக்குகிறீர்களா? என்று சிற்பியிடம் கேட்டார்.

சிற்பி சிரித்துக் கொண்டே, இல்லை ஐயா! கீழே கிடக்கும் சிலையானது உடைந்து போனது, என்றார். பணக்காரர் ஆச்சரியத்துடன் என்ன சொல்றீங்க மிகவும் அழகாக தானே இருக்கிறது அந்த சிலை. எந்த பாகமும் உடையக்கூட இல்லையே எனக் கேட்டார். அந்த சிலையின் மூக்கில் சின்ன கீறல் இருக்கிறது பாருங்கள் என்றார் சிற்பி.

ஆமாம்.., அது சரி, இந்த சிலையை எங்கே வைக்கப் போகிறீர்கள்? என்று கேட்டார் பணக்காரர். இது கோவில் கோபுரத்தில் நாற்பது அடி உயரத்தில் வரும் சிலை, என உளியை உயர்த்திக் காட்டியபடி, சொன்னார் சிற்பி.

பணக்காரர் வியப்புடன் நாற்பது அடி உயரத்தில் இந்த சின்ன கீறலை யார் கண்டுபிடிக்கப் போகிறார்கள்? இதற்காக ஏன் இன்னொரு சிலை செய்கிறாய் முட்டாள் என்றார்.

அந்த சிலையில் கீறல் இருப்பது எனக்கு தெரியுமே, எப்போது அந்த கோவில் வழி சென்றாலும் எனக்கு என் தொழிலில் உள்ள குறை உறுத்துமே. அதனால் தான் இன்னொரு சிலை செய்கிறேன் என்றார் சிற்பி.

நீதி :- **அடுத்தவர் பாராட்டுக்காக வேலை செய்யாதே உன் மனத்திருப்திக்காக வேலை செய்!**



## நிறைவாழ்வுச் சங்கம்

- 18.06.2024 அன்று மிட்ஸ் மற்றும் Sri Ram Foundation இணைந்து நடத்திய இலவச புற்றுநோய் பரிசோதனை முகாம், சின்னத்துறையில் வைத்து நடைபெற்றது. இம்முகாமில் மொத்தம் 22 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.
- 23.06.2024 அன்று மிட்ஸ் மற்றும் Sri Ram Foundation இணைந்து நடத்திய இலவச புற்றுநோய் பரிசோதனை முகாம், ஆசாரிபள்ளத்தில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் மொத்தம் 23 நபர்கள் கலந்துகொண்டு, பயன்பெற்றனர்.
- 16.07.2024 அன்று மடிக்கணினி பழுதுபார்க்கும் பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்தார்கள். மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து திரு. இராதா கிருஷ்ணன் அவர்களால் நடத்தப்பட்டு வரும் இந்தப் பயிற்சியில், 20 மாணவர்கள் கலந்து கொண்டு, பயன்பெற்று வருகின்றனர்.
- இலவச சிறப்பு கண் மருத்துவ முகாம் 11/07/2024 அன்று, குழித்துறை கிளஸ்டர் சார்பாக சூசைபுரம் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது.

**சுமைகளை கண்டு துவண்டு விடாதே. இந்த உலகத்தை சுமக்கும் பூமியே உன் காலடியில் தான்.**

# குடும்ப வளர்ச்சித் திட்டம் - அலகு I & II

குடும்ப வளர்ச்சித் திட்டம் இந்தியா சார்பாக திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையானது, ஒவ்வொருவரும் தாங்கள் தேர்வு செய்த தொழில்கள் செய்து, தங்களின் வாழ்வாதாரங் களை மட்டுமல்லாமல் தங்கள் குழந்தைகளின் கல்வி மற்றும் சேமிப்பை முன்னோக்கிச் செலுத்த, மிகுந்த உறுதுணையாக இருக்கிறது. குடும்ப வளர்ச்சித் திட்டம் அலகு I பயனாளிகள் செய்துவரும் சிறுதொழில்களில் சில (பயனாளிகள் செய்துவரும் தொழில்களுடன்).

## குடும்ப வளர்ச்சித் திட்டம் அலகு - I


(MR 3653)


(MR 3613)


(MR 3704)


(MR 677)


(MR 3578)


(MR 3659)


(MR 3674)


(MR 3573)


(MR 33513)


(MR 33597)


(MR 3562)


(MR 3707)


(MR 3656)


(MR 3619)


(MR 3607)

ஒவ்வொரு நிமிடமும் இந்த உலகத்தை உன்னால் ஜெயிக்க முடியும்.
முதல் நிமிடம் மட்டும் நிதானமாக யோசித்தால் . .

## குடும்ப வளர்ச்சித் திட்டம் அலகு - II



(MA 119)



(MA 136)



(Ma160)



(MA 166)



(Ma172)



(MA 173)



(MA 220)

# விருட்சம்

## நுண்கடன் திட்டம்

விருட்சம் நுண்கடன் திட்டம் வழியாக, குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரங்கள் உயர்ந்திட, தொழில்கள் செய்வதற்கு கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றது. அதன்படி, குழுக்களுக்கு வழங்கப்பட்ட தொகைகள் பின்வருமாறு,



மிட்ஸ் றாயல் சுயஉதவிக்குழு

களியக்காவிளை மண்டலம்
15 குழுக்களில்
60 உறுப்பினர்களுக்கு மொத்த தொகை ரூ. 30,00,000/-
ஜூன் மாதம் 2024 அன்று வழங்கப்பட்டது.

நாகர்கோவில் மண்டலம்
10 குழுக்களில்
40 உறுப்பினர்களுக்கு மொத்த தொகை ரூ. 20,00,000/-
ஜூலை மாதம் 2024 அன்று வழங்கப்பட்டது.

மார்த்தாண்டம் மண்டலம்
10 குழுக்களில்
40 உறுப்பினர்களுக்கு மொத்த தொகை ரூ. 20,00,000/-
ஆகஸ்ட் மாதம் 2024 அன்று வழங்கப்பட்டது.

எந்த அவமானத்தையும் வலியாய் எடுத்துக் கொள்ளாதே. வழியாய் எடுத்துக்கொள்!.

# தளிர்கள் உலகம் மற்றும் விண்ணைத்தொடு (Changing The Way We Care CTWWC)

**ஒருங்கிணைந்த உதவிக்கரங்கள். . . .**



மிட்ஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலில், மிட்ஸ் சுயஉதவிக் குழுக்களின் உதவியோடு கடந்த 2023 டிசம்பர் மாதம் நடைபெற்ற சுய உதவிக்குழுக்களின் ஆண்டுவிழா நிகழ்வின் போது, அவர்களால் சேகரிக்கப்பட்ட ரூ. 2,00,000/- மதிப்புள்ள பள்ளி உபகரண பொருட்கள், நமது சமூகத்தில் பள்ளிச் செல்லும் ஏழை குழந்தைகள் 209 பேருக்கு வழங்கப்பட்டது.

**சுற்றுச்சூழலை மீட்டெடுப்போம் . . . .**

நெகிழிப் பைகள் (பிளாஸ்டிக்) பயன்படுத்துவதை குறைக்க, குழந்தை பருவத்திலிருந்தே அறிவுறுத்தும் வகையில் ஆர்வலர்களிடமிருந்து பெறப்பட்ட பயன்படுத்தப்பட்ட சேலைகளை சேகரித்து, அதனை துணிப்பைகளாக உருவாக்கி, அதில் கல்வி உபகரணப் பொருட்கள் வைத்து நடைக்காவு, மங்காடு, உண்ணாமலைகடை, மாங்கோடு, சுருளக்கோடு, நாகர்கோவில் மற்றும் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து, ஜூன் 3-ம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்ட சுயஉதவிக்குழுக்கள் மற்றும் CTWWC (Changing The Way We Care) பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டது.






**இயற்கையோடு ஒன்றிப்போம் . . .**



2024 ஜூன் 5-ம் தேதி அகில உலக சுற்றுச்சூழல் தினமானது களியக்காவிளை மண்டலத்திலுள்ள தளிர்கள் உலகம் மற்றும் விண்ணைத்தொடு CTWWC (Changing The Way We Care) திட்டத்திலுள்ள பயனாளிகள் இணைந்து, நடைக்காவு சமூக நலக்கூடத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் தோட்டக்கலை முன்னாள் துணை இயக்குநர் திரு. ராஜகுமார் அவர்கள் பங்கேற்று, இயற்கை விவசாயம், மூலிகை செடிகள் மற்றும் மரவளர்ப்பு குறித்த கருத்துக்களை பங்கேற்பாளர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். நிகழ்வின் இறுதியில் சமூகக் கூட வளாகத்தில் ஒரு பலா மரக்கன்று மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்களால் நடப்பட்டது. தொடர்ந்து, 125 பங்கேற்பாளர்களுக்கும் பலா மரக்கன்று கொடுக்கப்பட்டது. வளரும் சமூகத்திற்கு சுற்றுச்சூழலை பாதுகாப்பது மற்றும் இயற்கையை பராமரிப்பதின் முக்கியத்துவத்தை இந்நிகழ்வின் வழியாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



- 24.06.2024 அன்று தளிர்கள் உலக திட்டத்தில் 12-ம் வகுப்பு முடித்த 62 மாணவர்களுக்கு ரூபாய் 11,06,626/- கணக்கு முடித்து வழங்கப்பட்டது.
- 13.07.2024 அன்று தளிர்கள் உலக பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த வகுப்புகளில் கலந்துகொண்ட தாய்மார்களுக்கு திரு. ஜூலியஸ் பாண்டியன் அவர்களால் சோப்பு, சர்ப் மற்றும் நறுமண பொருட்கள் செய்யும் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த வகுப்புகளில் 63 மாணவர்களும் 35 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

**பார்க்க வேண்டியதை விழிகள் தீர்மானிக்கட்டும். பார்க்க வேண்டாததை இமைகள் தீர்மானிக்கட்டும். இலக்கு எதுவென்பதை இதயம் தீர்மானிக்கட்டும்.**

## மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு (MTT)

மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை கீழ்க்கண்ட இடங்களில் மதியம் 2.30 மணிமுதல் 3.30 மணி வரை நடைபெறும். தளிர்கள் உலக நபர்கள் தவறாது பங்கெடுக்க வேண்டும். அனைத்துத் தேர்வுகளையும் எழுதும் நபர்களுக்கு வருட இறுதியில் மண்டலவாரியாக பரிசுகள் வழங்கப்படும்.

1. மிட்ஸ் அலுவலகம், கழுவன்திட்டை
2. மலங்கரை ஸ்கூல் ஆப் காமர்ஸ், மரியகிரி
3. புனித தோமையார் நடுநிலைப்பள்ளி, தேமானூர்
4. மிட்ஸ் மண்டல அலுவலகம், பெருவிளை, நாகர்கோவில்

## விண்ணைத்தொடு திட்டம்

- 13.07.2024 அன்று விண்ணைத்தொடு திட்டத்தில் உள்ள 27 மாணவ மாணவிகளுக்கு படிப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.
- 20.06.2024 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் சார்பாக திட்ட அலுவலர் சஞ்சனா அவர்களால் Safeguard Monitoring Visit நடத்தப்பட்டது.
- 23.06.2024 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் சார்பாக நடைக்காவு குழு ஆற்றுப்படுத்துதல் Group Counselling நடத்தப்பட்டது. இந்த ஆற்றுப்படுத்துதலை திரு. அராசு, திருமதி. மேரி பெல்சிட் மற்றும் அருட்சகோதரர் சச்சின் ஆகியோர் வழிநடத்தினர். இதில் மொத்தம் 55 பயனாளிகள் கலந்துகொண்டனர்.



# மிட்ஸ் மரியன் இயக்கம்



மிட்ஸ் மரியன் இயக்க பயனாளிகளின் கிளஸ்டர் அளவில் கூடுகையானது, ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் வைத்து நடைபெறும். ஒருங்கிணைப்பாளர் Sr. அகதா அவர்கள் ஒவ்வொரு பயனாளிகளும் நன்முறையில் தொழில் செய்து முன்னேற வேண்டும் எனவும், தொழிலுக்காக நீங்கள் பெற்றுக்கொண்ட தொகையினை (கடன் தவணையாக) ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாளுக்குள் செலுத்த வேண்டும் எனவும், பயனாளிகள் குடும்பத்திற்காக வருவாய் ஈட்டும் முயற்சியில் முன்னோக்கி செல்ல வேண்டிய வழிமுறைகளை ஒவ்வொரு மரியன் இயக்க பயனாளிகளுக்கும், அவர்களோடு உடனிருந்து ஊக்கவுரை நிகழ்த்தினார்.

# கோல்பிங்



- 05.07.2024 அன்று கோல்பிங் இந்தியா சார்பாக 28 கோல்பிங் குடும்ப உறுப்பினர் களுக்கு அரசுத் திட்டங்கள் குறித்தும் அவற்றை பெறும் வழிமுறைகள் குறித்தும் பயிற்சி வழங்கப்பட்டது.
- 05.07.2024 அன்று 13 கோல்பிங் குடும்ப உறுப்பினர்களுக்கு வருமானம் ஈட்டும் சிறுதொழில்கள் செய்ய நபருக்கு 1 இலட்சம் வீதம் 13 இலட்சம் ரூபாயும், 3 நபர்களுக்கு ரூபாய் 40,000/- வீதம் 1,20,000/- ரூபாயும் வழங்கப்பட்டது.
- 13.07.2024 அன்று கோல்பிங் மரியகிரி கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு தலைமைப் பண்பு பயிற்சியானது மரியகிரி ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. பயிற்சியாளராக வழக்கறிஞர் ஆன்ட்றூஸ் ஜெரோன் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சி வழங்கினார். 40 உறுப்பினர்கள் ஆவலுடன் கலந்து கொண்டார்கள்.
- 16.07.2024 மற்றும் 17.07.2024 ஆகிய இரு தினங்கள் கோல்பிங் சார்பாக சென்னையில் நடைபெற்ற தேசிய அளவிலான ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. சஜிக்குமார் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

**ஓய்வில்லாமல் உழைப்பதால்தான் கடிகாரம் உயர்ந்த இடத்தை அடைந்தது நாமும் உயர வேண்டும் என்று தன்னம்பிக்கையோடு உழைத்தால் நிச்சயமாக உயரலாம்.**

# தன்னார்வலர் கூடுகை

பிற நிகழ்வுகள்

மிட்ஸ் எழுவோம் இயக்கத்தில் 100-க்கும் மேற்பட்ட நபர்கள் தன்னார்வலர்களாக உள்ளனர். அவர்களை ஒன்றிணைத்து ஆண்டுதோறும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டிற்கான வழிகாட்டுதல் கூட்டமானது 01.07.2024 அன்று நாகக்கோடு பகுதியில் அமைந்துள்ள மதர் அன்னா வலிநிவாரணம் மற்றும் ஆற்றுப்படுத்துதல் மையத்தில் வைத்து நடத்தப்பட்டது. காலை 10 மணிக்கு ஆற்றுப்படுத்துதல் மையத்தை நடத்திவரும் அருட்சகோதரி சிசிலியா அவர்கள் புற்றுநோய் குறித்த கருத்தரங்கினை நடத்தினார்கள். புற்றுநோய் என்றால் என்ன? புற்றுநோய் எதனால் ஏற்படுகிறது? புற்றுநோயை தடுக்கும் வழிமுறைகள், புற்றுநோயின் கடைசிநிலையில் உள்ளவர்களுக்கு செய்யப்படும் சேவைகள் ஆகியவை குறித்து, ஒளிப்படம் வாயிலாக விளக்கமளித்தார்கள். பின்னர், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் நோயாளிகளை, அனைவரும் சந்தித்து, ஆறுதல் கூறினர். இந்த கருத்தரங்கில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம், மிட்ஸ் பணியாளர்கள் மற்றும் ஐம்பதுக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்துகொண்டனர்.



பிறர் நினைத்ததை எழுதும் காகிதமாய் இருக்காதே! நீ நினைத்ததை எழுதும் பேனாவாக இரு!!

கடந்த இதழ் தொடர்ச்சி

# Cancer Day Fund Collection 2024

## மிட்ஸ் மார்த்தாண்டம் பணி மண்டலம்

| மார்த்தாண்டம் | |
|---|---|
| மிட்ஸ் எழில் | 1800 |
| பன்னிமான்தோட்டம் | 1650 |
| மிட்ஸ் வின்னேஸ் | 500 |
| சாத்தச்சிவிளை II | 2630 |
| தச்சன்விளாகம் | 750 |
| வட்டவிளை | 3000 |
| மிட்ஸ் நெடுவிளை | 1000 |
| மிட்ஸ் இறஞ்சிலி சுயஉதவிக்குழு | 1000 |
| மிட்ஸ் கல்லுவிளை | 1000 |
| கணியன்விளை | 3600 |
| மிட்ஸ் குழிவிளை | 710 |
| சாத்தச்சிவிளை I | 1600 |
| மிட்ஸ் தீபம் | 300 |
| அக்கிவிளை | 1300 |
| மிட்ஸ் வண்ணான்விளை | 500 |
| கோணம் II | 1000 |
| கோணம் I | 1000 |
| மிட்ஸ் பறம்புவிளை | 1200 |
| மிட்ஸ் இன்பெண்ட் ஜீசஸ் | 1700 |
| மிட்ஸ் கல்லறவிளை | 2200 |
| மிட்ஸ் மலையரம் | 1000 |
| மிட்ஸ் சிறியக்காட்டுவிளை | 590 |
| மிட்ஸ் பம்மம் | 600 |
| மிட்ஸ் கோட்டவிளை | 500 |
| பண்டாரவிளை | 1700 |
| கோவில்விளை | 500 |
| மிட்ஸ் கிறிஸ்துராஜா | 3750 |
| மாதிச்சவிளாகம் | 500 |
| கலங்கரைவிளை | 500 |
| மாமூட்டுக்கடை | 800 |
| வேம்பனாவிளை | 500 |
| மொத்தம் | 39380 |

| பூதப்பாண்டி | |
|---|---|
| சிங்களோயர் II | 500 |
| ஞாலம் II | 1000 |

| சூரியகோடு | |
|---|---|
| மருதன்கோடு | 350 |
| மிட்ஸ் மடத்துவிளை குழு | 1000 |
| மிட்ஸ் சணையன்விளை | 1200 |
| அப்பட்டுவிளை | 1000 |

| பாலவிளை | |
|---|---|
| மிட்ஸ் கடுவாக்குழி | 1500 |
| காரைக்காவிளை | 700 |
| மணலி II | 200 |

| கிராத்தூர் | |
|---|---|
| மஞ்சத்தோப்பு | 1050 |
| மிட்ஸ் வெங்குளங்கரை | 870 |
| தேரிவிளை II | 1000 |
| விறகுவெட்டிவிளை | 460 |
| மிட்ஸ் கல்வெட்டான்குழி | 750 |

| அகஸ்தீஸ்வரம் | |
|---|---|
| ஏழுசாத்துபட்டு | 900 |
| மிட்ஸ் றோஸ் T.P. தோப்பு | 3100 |
| மிட்ஸ் மலர் | 700 |
| மிட்ஸ் சங்கமம் | 600 |

| மந்தாரம்புதூர் | |
|---|---|
| மிட்ஸ் அகஸ்தீஸ்வரம் | 3400 |
| மிட்ஸ் கங்கா | 2000 |
| வெள்ளை ரோஜா | 1000 |

| ஆதிச்சவிளாகம் | |
|---|---|
| மிட்ஸ் மங்கலத்துவிளை குழு | 1400 |
| புனத்துவிளை | 1500 |
| தெக்குவிளை | 4150 |
| உதிவிளை | 1000 |

| நாகர்கோவில் I | |
|---|---|
| மிட்ஸ் கல்கி | 3000 |
| டாலியா அழகர்கோணம் | 1200 |
| அழகுமலர் அழகர்கோணம் | 1600 |
| பொன்மலர் தேனிக்குளம் | 2290 |
| மிட்ஸ் அன்னா சுயஉதவிக்குழு | 2000 |
| மிட்ஸ் மங்கை | 1000 |
| மிட்ஸ் றாயல் | 1300 |
| மிட்ஸ் இன்பெண்ட் ஜீசஸ் | 820 |
| மொத்தம் | 13210 |

| உண்ணாமலைக்கடை | |
|---|---|
| மிட்ஸ் கங்கை | 2730 |
| மிட்ஸ் அடைக்கல மாதா | 600 |
| மேலவிளை | 1000 |
| மிட்ஸ் முளங்கூட்டுவிளை | 900 |
| மிட்ஸ் முல்லை | 500 |

உங்கள் வருங்காலத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். உங்கள் நிகழ்காலத்தில் நல்லவிதமாக செயல்பட்டால் உங்கள் வருங்காலம் தன்னால் மலரும்.

| | |
|---|---|
| மிட்ஸ் டோண் போஸ்கோ | 1270 |
| மிட்ஸ் சென்ஜோசப் | 1770 |
| மிட்ஸ் டாலியா புத்தன்தேரிவிளை | 440 |
| மிட்ஸ் நன்னீர் | 1000 |
| மிட்ஸ் விறாலிக்காடு | 1000 |
| மிட்ஸ் ஆரோன் | 2270 |
| மிட்ஸ் துலாவிளை | 1120 |
| மிட்ஸ் கண்ணனூர் | 1200 |
| மிட்ஸ் சகாய அன்னை | 1300 |
| மிட்ஸ் ஆனையடி | 1330 |
| மிட்ஸ் மதர் தெரசா | 500 |
| மிட்ஸ் பனிமயமாதா | 1500 |
| மிட்ஸ் கிறிஸ்டல் | 750 |
| மிட்ஸ் வள்ளிக்காட்டுவிளை | 1050 |
| மிட்ஸ் வெட்டுக்காட்டுவிளை | 700 |
| மிட்ஸ் வாரிக்காவிளை | 1650 |
| மிட்ஸ் பிச்சன்விளை | 1000 |
| மிட்ஸ் செருப்பாலூர் | 2200 |
| மிட்ஸ் அமல மாதா | 500 |
| மிட்ஸ் இதயமலர் | 2500 |
| மிட்ஸ் வானவில் | 1600 |
| மிட்ஸ் பூந்தோப்பு | 1000 |
| மிட்ஸ் புதயல் | 1000 |
| மிட்ஸ் சியோன்மலர் | 1200 |
| மாத்தார் பகுதி | 1155 |
| மொத்தம் | 36735 |

| நடைக்காவு | |
|---|---|
| மிட்ஸ் கண்ணங்கரவிளை | 910 |
| சென்தோமஸ் மிட்ஸ் | 1000 |
| சாத்தன்கோடு | 600 |
| மணலிவிளை | 750 |
| வலியவிளை | 750 |
| மிட்ஸ் கிடாரக்குழி | 1000 |
| மிட்ஸ் கிடாரக்குழி II | 770 |
| மிட்ஸ் ஆதிவிளை | 650 |
| ஜெயமாதா | 1000 |
| மிட்ஸ் நாதம் | 950 |
| சோனிச்சன்விளை | 800 |
| நீரோட்டுவிளை | 850 |
| கீழவீட்டுவிளை | 1000 |
| பருத்திவிளை | 600 |
| மாவிளை | 1000 |
| மிட்ஸ் நடுதேரிவிளை | 1000 |
| கல்லம்பொற்றை | 1000 |
| மிட்ஸ் விண்மீன் | 1150 |
| நெல்லிவிளை | 700 |
| புளிநின்றவிளை | 1200 |
| அறுவன்பொற்றை | 500 |
| சுமடுதாங்கிவிளை | 500 |
| தாழான்விளை | 930 |
| கும்பளப்பள்ளி | 900 |
| கல்லசாரிவிளை | 1000 |
| மிட்ஸ் அருள்ஜோதி | 1000 |
| கோலாச்சிவிளை | 700 |
| கொட்டைக்காடு | 1000 |
| மிட்ஸ் கிடாரக்குழி III | 2075 |
| மொத்தம் | 26285 |

| மேக்கோடு | |
|---|---|
| மிட்ஸ் நவ்வோதையா | 4000 |
| மேக்கோடு III | 399 |
| பனிச்சக்குழி II | 1085 |
| சூரிய சுயஉதவிக்குழு | 300 |
| மேக்கோடு II | 1200 |
| மிட்ஸ் மருதன்விளை | 1450 |
| பனிச்சக்குழி | 3500 |
| மிட்ஸ் வின்னிலா | 1400 |
| மிட்ஸ் ஜாஸ்பின் | 1000 |
| மொத்தம் | 14334 |

| நாகர்கோவில் II | |
|---|---|
| குறிஞ்சி ஆளுர் கிராமம் | 500 |
| சிந்து ஆளுர் கிராமம் | 400 |
| அத்திப்பூ | 360 |
| மிட்ஸ் செம்பகம் | 1500 |
| டைசிபிளவர் | 3810 |
| சுகந்தம் பழவிளை | 1800 |
| லிற்றில்பிளவர் | 1000 |
| மிட்ஸ் நோபிள் | 1100 |
| ஸ்டார் ஆசாரிப்பள்ளம் | 3850 |
| யமுனா | 1700 |
| றோஸ்மலர் | 2000 |
| வசந்தமலர் | 3000 |
| குயின் பருத்திவிளை | 15000 |
| நாகர்கோவில் II Common | 1500 |
| மிட்ஸ் பேசில் | 700 |
| மொத்தம் | 38220 |

புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் நிதி திரட்டல் நிகழ்விற்கும் முழுமையாக கலந்து ஒத்துழைத்த நல்லுள்ளங்களுக்கு மிட்ஸ் நிறுவனத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவண், இயக்குநர் மிட்ஸ்

(முற்றும்)

கடந்து போனதை சிந்திக்காதீர்கள். இன்னும் கடக்க வேண்டிய விஷயங்களை சிந்தியுங்கள்


# MIDS Member Welfare Scheme (MMWS)

மிட்ஸ் MMWS திட்டத்தில் புதுப்பித்தல் மற்றும் புதிய உறுப்பினர்களின் சேர்க்கையானது (2025 ஆண்டிற்கான) 2024 நவம்பர் மாதம் 15 நாள் தொடங்கி, டிசம்பர் மாதம் 15-ம் தேதி வரை சுயஉதவிக்குழு மற்றும் கோள்பிங் குடும்ப உறுப்பினர்கள், அமைப்பாளர் மற்றும் அனிமேட்டர் வழியாக படிவங்களைப் பெற்று, பூர்த்தி செய்து, ரூபாய் 100/- செலுத்தி பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இறந்த நபர்களின் வாரிசுக்கு நிவாரண தொகையும் வழங்கப்பட்டன.

| வ.எண் | இறந்த உறுப்பினர் பெயர் | வாரிசுத்தாரர் பெயர் | குழு / கோள்பிங் பெயர் | நிவாரண தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | ஜெகதா | நிஷாந் | மிட்ஸ் ஆனப்பாறை | 10,000/- |
| 2 | ஷெர்மி | சுனில் | மிட்ஸ் அல்போன்சம்மாள் | 10,000/- |
| 3 | கவிதா | தங்கப்பன் | மிட்ஸ் கஸ்தூரிபாய் கிராமம் | 10,000/- |
| 4 | ராஜம் | தாஸ் | மிட்ஸ் முவாற்றுமுகம் | 10,000/- |
| 5 | கனகம்மா | ஸ்டான்லி செல்லன் நாடார் | மிட்ஸ் மஞ்சத்தோப்பு IV குழு | 10,000/- |
| 6 | ஜாஸ்பின் கீதா | அருள் லாசர் | மிட்ஸ் சிங்கிளேயர் II குழு | 10,000/- |
| 7 | ராதா | சௌமியா | சகாயமாதா குழு | 10,000/- |
| | | மொத்தம் | | 70,000/- |


மிட்ஸ் முவாற்றுமுகம்


மிட்ஸ் கஸ்தூரிபாய் கிராமம்




கடவுள் எல்லோருக்கும் சமமாக வழங்கிய பொதுவான செல்வம் நேரம் தான்!.
நேரத்தை வீணடிப்பவன் ஏழை!. பயன்படுத்துபவன் பணக்காரன்!.

# குறுக்கெழுத்துப்போட்டி

**உங்கள் மூளைக்கு ஒரு சவால்**

**இடமிருந்து வலம்**


1. Digital Revolution என்பது . . . . . . . புரட்சி (4)
7. சிறந்த நூலகர்களுக்கு எவ்விருது வழங்கி சிறப்பிக்கப்படுகிறது? (10)
11. பொருளாதார நடவடிக்கைகளான வியாபாரம், வாணிபம், விவசாயம் ஆகியவற்றிற்கு தேவைப்படும் . . . . . . . உயிர்வாழ இரத்தம் தேவைப்படுவதைப் போன்றது. (2)
15. தமிழகத்தில் நெல்லிக்காய் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாவட்டம் எது?(3)
17. இந்தியாவின் முதல் அமைச்சரவை செயலாளர்? (5)
19. 100 லிருந்து 10ஐ உன்னால் எத்தனை முறை கழிக்க முடியும்? (2)
21. உலகிலேயே மிகப்பெரிய கடிகாரம் (4)
23. Conveyor Belt என்பதற்கு இணையான தமிழ்சொல் . . . . . . . . . . . (7)

**மேலிருந்து கீழ்**

2. திருநெல்வேலிப் பகுதியில் வளம் செழிக்கச் செய்யும் ஆறு எது? (6)
6. ஜப்பான் நாட்டின் பணம் . . . . . . . .என்று அழைக்கப்படுகிறது? (2)
8. தொழில்முனைவோர் என அழைக்கப்படுபவர் யார்? (6)
9. “உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகம்” என்றவர் யார்? (2)
10. உலவி என்பது . . . . . . . . (7)
12. சோனிக் ஒலி என்று அழைக்கப்படும் ஒலி?

**வலமிருந்து இடம்**

3. உலகளவில் 80% முருங்கை இலை உற்பத்தி எந்த நாட்டில் உள்ளது? (4)
4. கன்னியாகுமரியில் பொதுமக்கள் பார்வைக்காக திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்ட ஆண்டு? (4)
5. குறைந்த பிறப்பு விகிதம் கொண்ட இந்திய மாநிலம் ? (3)
10. காசநோய்க்கான தடுப்பூசி . . . . . . . . (3)




13. ஆழி என்ற சொல்லின் பொருள்? (3)
18. பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைக்காதீர் என்பது யாருடைய கூற்று ஆகும்? (4)
21. ஆர்ட்டீஸியன் கிணறுகள் முதல்முதலில் எங்கு கண்டுபிடிக்கப்பட்டன (4)

**கீழிருந்து மேல்**

14. இரவில் செயல்படும் கடைவீதியின் பெயர்? (6)
16. சமூக வளர்ச்சிக்கு எதை மிகச் சிறந்த கருவியாகப் பெரியார் கருதினார்? (3)
20. திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் எனக் கண்டுபிடித்தவர் யார்? (5)
22. பறந்து கொண்டே உறங்கும் பறவை எது ... (3)

உழைப்பு இன்றி உயர்வு இல்லை, அன்பு இன்றி மகிழ்வு இல்லை.

குறிப்பு : சரியான பதில் எழுதும் நபருக்கு குலுக்கல் முறையில் தேர்வு செய்து தக்க பரிசு வழங்கப்படும். விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 2024 நவம்பர் 12. அதற்குப் பின்வரும் விடைகள் நிராகரிப்படும். புத்தகத்தின் இந்த பக்கத்தில் விடைகளை எழுதி கத்தரித்து தபாலில் அல்லது அமைப்பாளர் வழியாக அனுப்பவும். நகல் அனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

முகவரி : ஆசிரியர், ஐக்கியச்சுடர், மிட்ஸ் அலுவலகம்,
இடைவிளாகம், கழுவன்திட்டை,
குழித்துறை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629163,
தமிழ்நாடு.

சென்ற மாத குறுக்கெழுத்துப்போட்டியில் வெற்றிபெற்றவர்

திருமதி. T. நிஜா, மிட்ஸ் ராஜீவ்காந்தி சுயஉதவிக்குழு, ஆற்றூர் கிளஸ்டர், மார்த்தாண்டம் பணிமண்டலம்.

போட்டியில் ஆர்வத்துடன் பங்குபெற்ற அனைத்து சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கும் மிட்ஸ் நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துக்கள். தொடர்ந்து உங்கள் ஆதரவினை வேண்டுகிறோம்.

**2024-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட முதல் 10 நாடுகள்**

| | | |
|---|---|---|
| இந்தியா | - | 1,450,935,791 |
| சீனா | - | 1,419,321,278 |
| அமெரிக்கா | - | 345,426,571 |
| இந்தோனேசியா | - | 283,487,931 |
| பாகிஸ்தான் | - | 251,269,164 |
| நைஜீரியா | - | 232,679,478 |
| பிரேசில் | - | 211,998,573 |
| பங்களாதேஷ் | - | 173,562,364 |
| ரஷ்யா | - | 144,820,423 |
| எத்தியோப்பியா | - | 132,059,767 |

## வாசகர் கவனத்திற்கு

மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழில் தங்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் இவ்விதழில் தங்களின் விளம்பரங்கள் வெளியிட விரும்பினால், அதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

**விளம்பரம்**

**இதழின் கடைசிப் பக்கம்**
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.2500
அரைப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.1250

**இதழின் முதல் பக்கத்தின் உள்பகுதிக்கு**
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.2000

**இதழின் கடைசி பக்கத்தின் உட்பக்கம்**
அரை பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.750
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.1500

**பிறந்தநாள் மற்றும் திருமண வாழ்த்துகள்**
காற்பக்கம் கட்டணம் Rs.250 அரைப்பக்கத்திற்கு கட்டணம் Rs.500
முழுப்பக்கத்திற்கு கட்டணம் Rs.1000

விளம்பரங்கள் வெளியிட விரும்புவர்கள் மிட்ஸ் அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் தங்களின் சொந்த படைப்புகள் மற்றும் விமர்சனங்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மிட்ஸ் அலுவலகம்**
இடைவிளாகம் - கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629 163
Email:midsmarthandam@gmail.com Website:mids.org.in
Ph : 263390, 295690

சந்தேகத்தை எரித்துவிடு; நம்பிக்கையை விதைத்துவிடு; மகிழ்ச்சி தானாகவே மலரும்.

# MARTHANDAM PEOPLE DEVELOPMENT NIDHI LTD

# மார்த்தாண்டம் பீப்பிள் டெவலப்மென்ட் நிதி லிமிடெட்



CIN U65990TN2011PLC082557

Unit of DIOCESE OF MARTHANDAM

தலைமை அலுவலகம் :

மலங்கரை கட்டிடம், மார்த்தாண்டம் - 629 165,

Ph : 04651 - 271523



## வைப்பு நிதிக்கு அதிக வட்டி

| | |
|---|---|
| Fixed Deposit (வைப்பு நிதி 1 வருடம்) | 8.75% |
| Fixed Deposit (மூத்த குடிமக்கள்) | 9.25% |
| Fixed Deposit (வைப்பு நிதி 2 வருடம்) | 9.50% |
| Savings Account (சேமிப்பு கணக்கு) (DAILY BALANCE METHOD) | 4% |
| RD (தொடர் வைப்பு நிதி) | 8% |
| RD மணவாட்டி / பட்டதாரி | 10% |

## தங்க நகைக்கடனுக்கு குறைந்த வட்டி

**தங்க நகைக் கடன்**

100 ரூபாய்க்கு 1 மாத வட்டி

**1 ரூபாய் மட்டுமே**

அப்ரைசிங் சார்ஜ் மற்றும்

மறைமுக கட்டணம் எதுவும் இல்லை

கடன் தவணை முடியும் வரை எளிய வட்டி

(Simple Interest) - ல் வட்டி கணக்கிடப்படுகிறது.

**இந்த நிதிநிறுவனம் மார்த்தாண்டம் கத்தோலிக்க**

**மறைமாவட்ட நிதிநிறுவனம்**

**ஆகையால், உங்கள் பணத்திற்கு 100% உத்திரவாதம்.**

வாடிக்கையாளர்களின் நலன் கருதி

திங்கள் முதல் வெள்ளி வரை

காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையும்

சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை

தங்க நகைக்கடன் வழங்கப்படும்.



### கிளைகள்

| | | |
|---|---|---|
| மார்த்தாண்டம் | (மலங்கரை கட்டிடம், மார்த்தாண்டம் ஜங்ஷன்) | Ph : 272123 |
| குலசேகரம் | (ஜோயல் பில்டிங், கான்வென்ட் ஜங்ஷன்) | Ph : 278123 |
| உண்ணாமலைக்கடை | (காருண்யா காம்பிளக்ஸ், உண்ணாமலைக்கடை ஜங்ஷன்) | Ph : 246723 |
| கருங்கல் | (தாயகம் பிளாசா, கருங்கல் ஜங்ஷன்) | Ph : 269123 |
| பனச்சமூடு | (IOB வங்கி முதல் மாடி, பனச்சமூடு ஜங்ஷன்) | Ph : 296012 |
| பார்வதிபுரம் | (தீபமணி காம்பிளக்ஸ் K.P. ரோடு) | Ph : 262123 |
| நித்திரவிளை | (மாதா காம்பிளக்ஸ், நித்திரவிளை ஜங்ஷன்) | Ph : 208123 |

# மிட்ஸ் நிகழ்வுகள் ஒரு பார்வை




தளிர்கள் உகை பயனாளிகளுக்கு சிறப்புப் பயிற்சி





தளிர்கள் உகை திட்ட பயனாளிகளின் தாய்மார்களுக்கான சிறப்புப் பயிற்சி



தளிர்கள் உகை திட்ட புதிய பயனாளிகளின் துவக்கப் பயிற்சி



விருட்சம் நுண்கடன் வழங்க குழுக்களின் கணக்குப் புத்தகம் சரிபார்த்தல்




கண் பரிசோதனை முகாம் – களியக்காவிளை பணி மண்டலம்


TATA AIG INSURANCE
WITH YOU ALWAYS
LIC
STAR Health Insurance
The Health Insurance Specialist

**9043435090, 9080507090**

RD, Life Insurance, Health Insurance,
Bike, Car, Comercial Vehicle Insurance,
Income Tax Return, Filling GST Registration
Available...

**T. SELVIN RAJ KUMAR**
Pilankalai House,
Kirathoor P.O